DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-241/2022

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.சரண்யா | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.07.2025– 11.10PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் தற்போது உலையூர் குரூப் வி.ஏ.ஓ–வாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2022 ம் ஆண்டு தாளியரேந்தல் குரூப் வி.ஏ.ஓ யாக பணிபுரிந்து வந்தேன். கடந்த 17.06.2022 ம் ஆண்டு நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது மதியம் 03.00 மணியளவில் மாவட்ட Child line அலுவலகத்தில் இருந்து ஒரு சிறுவன் மட்டியரேந்தல் பகுதியில் ஆடு மேய்த்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது.

2. நானும், வருவாய் ஆய்வாளர் திரு.பெரியசாமி என்பவரும் உடனடியாக ஒரு அரை மணி நேரத்தில் மட்டியரேந்தல் கிராமத்திற்கு சென்றோம். அந்த கிராமத்தில் உள்ள வயலில் ஒரு சிறுவன் சுமார் 35 ஆடுகள் வீதம் மேய்த்து கொண்டிருந்தான். அந்த சிறுவனை நாங்கள் விசாரித்த போது தனக்கு 12 வயதாகிறது என்றும். கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆரபத்தி கிராமம் என்றும் அவரது தந்தை பெயர் ஏழுமலை என்றும் அவர் இறந்துவிட்டதாகவும் தனது தாய் பெயர் குப்பாயி என்றும் தனக்கு மூன்று உடன் பிறந்தவர்கள் என்றும் அதில் இரண்டு சதோதரிகள் என்றும் ஒரு அண்ணன் என்றும், அச்சிறுவன் கூறினான்.

3. தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஆடுகளை மேய்த்து வருவதாகவும் தான் மேய்க்கும் கீழபடியனேந்தல் கிராமத்தை சேர்ந்த பெருமாள் என்பவருக்கு சொந்தமானது என்றும் தனது குடும்ப கஷ்டம் காரணமாக முன்பணமாக ரூ.50 ஆயிரம் தனது அம்மாவிடம் கொடுக்கப்பட்டு அதற்கு ஈடாக தான் ஆடுகளை மேய்த்து வருவதாகவும் கூறினான்.

4. பின்னர் மேலும் ரூ.70 ஆயிரம் தனது அம்மாவிற்கு கொடுத்ததாகவும் கூறினான். தனக்கு படிப்பு வரவில்லை என்றும் அதனால் தன்னை ஆடு மேய்க்க அனுப்பிவிட்டதாகவும் கூறினான். படிக்க வைத்தால் படிக்க விருப்பமாக என்று கேட்டபோது தனக்கு படிக்க விருப்பம் என்றும் கூறினான். இது சம்பந்தமாக மாவட்ட வருவாய் கோட்டாச்சியருக்கு தகவல் அளித்தேன். பின்னர் அந்த சிறுவனை அழைத்து கொண்டு அன்றே மாலை 06.00 மணியளவில் வருவாய் கோட்டாட்சியர் பரமக்குடி அவர்களிடம் ஆஜர்படுத்தினேன்.

5. வருவாய் கோட்டாச்சியர் அச்சிறுவனிடம் விசாரணை செய்தார். அன்று இரவே 08.00 மணியளவில் சிக்கல் காவல் நிலையம் சென்று சிறுவன் என்று தெரிந்தும் ஆடு மேய்க்க பணி அமர்த்திய பெருமாள் என்பவர் மீது சிக்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** என்னை போலீசார் விசாரித்தார்கள். பின்னர் மாணவனை மாவட்ட Childline அலுவலகம் மூலமாக சிறுவனின் தாயாரான குப்பாயி என்பவரிடம் சிறுவனை ஒப்படைத்து விட்டதாக தெரிந்துகொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி